# அக்டோபர் – 07 – பொதுக்கால 27ம் ஞாயிறு

**“அவர்......தம்கைகளை அவர்கள் மீதுவைத்து ஆசி வழங்கினார்” – மாற் 2:9**

## முதல் வாசகம் : தொடக்க நூல் 2 : 18 - 24

ஆண்டவராகிய கடவுள்,மனிதன் தனிமையாக இருப்பது நல்லதன்று. அவனுக்குத் தகுந்த துணையை உருவாக்குவேன் என்றார்.ஆண்டவராகிய கடவுள் மண்ணிலிருந்து எல்லாக் காட்டு விலங்குகளையும் வானத்துப் பறவைகளையும் உருவாக்கி, அவற்றிற்கு மனிதன் என்ன பெயரிடுவான் என்று பார்க்க, அவற்றை அவனிடம் கொண்டு வந்தார். உயிருள்ள ஒவ்வொன்றுக்கும் அவன் என்ன பெயரிட்டானோ அதுவே அதன் பெயராயிற்று.கால்நடைகள், வானத்துப் பறவைகள், காட்டு விலங்குகள் ஆகிய எல்லாவற்றிற்கும் மனிதன் பெயரிட்டான் தனக்குத் தகுந்த துணையையோ மனிதன் காணவில்லை.ஆகவே ஆண்டவராகிய கடவுள் மனிதனுக்கு ஆழ்ந்த உறக்கம் வரச்செய்து, அவன் உறங்கும் பொழுது அவன் விலா எலும்பு ஒன்றை எடுத்துக்கொண்டு, எடுத்த இடத்தைச் சதையால் அடைத்தார்.ஆண்டவராகிய கடவுள் தாம் மனிதனிடமிருந்து எடுத்த விலா எலும்பை ஒருபெண்ணாக உருவாக்கி மனிதனிடம் அழைத்துவந்தார்.அப்பொழுது மனிதன், ”இதோ! இவளே என் எலும்பின் எலும்பும் சதையின் சதையும் ஆனவள் ஆணிடமிருந்து எடுக்கப்பட்டதால், இவள் பெண் என்று அழைக்கப்படுவாள்” என்றான்.இதனால் கணவன் தன் தாய் தந்தையை விட்டுவிட்டுத் தன் மனைவியுடன் ஒன்றித்திருப்பான் இருவரும் ஒரே உடலாய் இருப்பர்.

**பதில்பாடல் :** உம் வாழ்நாளெல்லாம் ஆண்டவர் உமக்கு ஆசி வழங்குவாராக.

## இரண்டாம் வாசகம் : எபிரேயர் : 2 : 9 - 11

சகோதர சகோதரிகளே! நாம் காண்பதோ சிறிதுகாலம் வானதூதரைவிடச் சற்றுத் தாழ்ந்தவராக்கப்பட்ட இயேசுவையே. இவர் துன்புற்று இறந்ததால், மாட்சியும் மாண்பும் இவருக்கு முடியாகச் சூட்டப்பட்டதைக் காண்கிறோம். இவ்வாறு கடவுளின் அருளால் அனைவருடைய நலனுக்காகவும் இவர் சாவுக்கு உட்பட வேண்டியிருந்தது.கடவுள் எல்லாவற்றையும் தமக்கென்று தாமே உண்டாக்கினார். அவர், மக்கள் பலரை மாட்சியில் பங்குகொள்ள அழைத்துச்செல்ல விரும்பியபோது, அவர்களது மீட்பைத் தொடங்கி வழிநடத்துபவரைத் துன்பங்கள் மூலம் நிறைவுள்ள வராக்கினார். இது ஏற்றசெயலே.தூய்மையாக்குகிறவர், தூய்மையாக்கப்படுவோர் அனைவருக்கும் உயிர்முதல் ஒன்றே. இதனால் இயேசு இவர்களைச் சகோதரர் சகோதரிகள் என்று அழைக்க வெட்கப்படவில்லை.

## நற்செய்தி : மாற்கு 10 : 2 - 16

அக்காலத்தில் பரிசேயர் இயேசுவை அணுகி, ”கணவன் தன் மனைவியை விலக்கிவிடுவது முறையா?” என்றுகேட்டு அவரைச் சோதித்தனர்.அவர் அவர்களிடம் மறுமொழியாக, ”மோசே உங்களுக்கு இட்டகட்டளை என்ன?” என்றுகேட்டார்.அவர்கள், ”மோசே மணவிலக்குச் சான்றிதழ் எழுதி அவரை விலக்கிவிடலாம் என்று அனுமதி அளித்துள்ளார்” என்றுகூறினார்கள்.அதற்கு இயேசு அவரிகளிடம், ”உங்கள் கடின உள்ளத்தின் பொருட்டே அவர் இக்கட்டளையை எழுதிவைத்தார்.படைப்பின் தொடக்கத்திலேயே கடவுள். ”ஆணும் பெண்ணுமாக அவர்களைப் படைத்தார்.இதனால் கணவன் தன் தாய் தந்தையை விட்டுவிட்டுத் தன் மனைவியுடன் ஒன்றித்திருப்பான்.இருவரும் ஒரே உடலாய் இருப்பர். “இனி அவர்கள் இருவர் அல்ல. ஒரே உடல்.எனவே கடவுள் இணைத்ததை மனிதர் பிரிக்காதிருக்கட்டும்” என்றார். பின்னர் வீட்டில் இதைப்பற்றி மீண்டும் சீடர் அவரைக்கேட்டனர்.இயேசு அவர்களை நோக்கி, ”தன் மனைவியை விலக்கிவிட்டு வேறொரு பெண்ணை மணப்பவன் எவனும் அவருக்கு எதிராக விபசாரம் செய்கிறான்.தன் கணவரை விலக்கிவிட்டு வேறொருவரை மணக்கும் எவளும் விபசாரம் செய்கிறாள்” என்றார். சிறுபிள்ளைகளை இயேசு தொட வேண்டுமென்று அவர்களைச் சிலர் அவரிடம் கொண்டுவந்தனர். சீடரோ அவர்களை அதட்டினர்.இயேசு இதைக் கண்டு, கோபம் கொண்டு, ”சிறு பிள்ளைகளை என்னிடம் வரவிடுங்கள். அவர்களைத் தடுக்காதீர்கள். ஏனெனில் இறையாட்சி இத்தகையோருக்கே உரியது.இறையாட்சியைச் சிறு பிள்ளையைப்போல் ஏற்றுக்கொள்ளாதோர் அதற்கு உட்படமாட்டார் என உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன்” என்றார்.பிறகு அவர் அவர்களை அரவணைத்து, தம் கைகளை அவர்கள்மீது வைத்து ஆசி வழங்கினார்.

**தியானம் :** பல அரிய கருத்துக்களையும், போதனைகளையும் ஆண்டவர் இயேசுவின் நற்செய்தி எமக்குத் தெரிவித்தாலும் இன்றைய நற்செய்தியில் பல மறை உண்மைகளை நாம் அவதானிக்கலாம். ஆதலால், இன்றைய நாளுக்கான நற்செய்தியில் ஆண்டவர் இயேசு திருமண உறவை மட்டுமல்ல, இன்றைய உலகின் விபச்சார வாழ்வைப்பற்றியும் எடுத்துக் கூறுவதாகவும் பொருள் கொள்ளலாம். எனினும், இயேசுவின் குணமளிக்கும் வல்லமை நிறைந்த ஆசீர் எமக்குத் தேவைப்படுவதனால், இறையாட்சியை நாம் ஏற்றுக்கொள்ள சிறுபிள்ளைகளைப் போல மனமாற்றமடைய வேண்டுமென பிறிதொரு உண்மையையும் இன்றைய நற்செய்தில் இயேசு வலியுறுத்துகின்றார். “இறைவன் இணைத்ததை மனிதன் பிரிக்காதிருக்கட்டும்” (மாற்கு10:9) என்ற வார்த்தைகள் அடுத்தவரது சீர்கெட்ட குடும்ப வாழ்வில் நமது தலையீடு இருக்கக்கூடாது என இயேசு எமக்குக் கூறுவதாக நாம் கோபப்படலாம். ஏனெனில் “இன்னார்க்கு இன்னாரென” எத்தனையோ எதிர்பார்ப்புக்களோடு ஆரம்பிக்கப்படுகின்ற திருமண உறவுகள் முறிவதனால் ஏற்படும் கொடூரமான வேதனை நிறைந்த அவமானத்திற்கு அக்குடும்பத்தின் கணவன், மனைவி மட்டுமல்ல குழந்தைகள் உட்பட ஏனையவர்களும் பலவித பாதிப்புக்களுக்கு உள்ளாவதனை நாம் மறுக்க முடியாது. ஆயினும், முறிந்த குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் பாவிகள், அவர்களது தான்தோன்றித் தனமான செயல்களுக்காக இறைவன் அவர்களைத் தண்டிக்கின்றார் எனப் பொருள் கொள்ளலாகாது. இவ்வுலகிற்கு தண்டனைத் தீர்ப்பளிப்பதற்காக ஆண்டவர் இயேசு வரவில்லை (யோவான்3:17) மாறாக, மறுவாழ்வு அளிப்பதற்காகவே அவர் இவ்வுலகிற்கு வந்தார். எனவே, இறைவனது சாயலாகப் படைக்கப்பட்ட நாம் திருமணம் செய்தவர்களாக, அல்லது விவாகரத்து செய்தவர்களாக மட்டுமல்ல, ஏன் திருமண உறவில் வாழாத தனி மனிதர்களாக எப்படியும் வாழலாம். ஆயினும், ஒவ்வொருவருக்கும் ஆண்டவர் இயேசுவின் விசேட குணமளிக்கும் வல்லமை நிறைந்த ஆசீர் அவசியம். ஆதலால், எமது தவறுகளுக்காக நாம் மனம் வருந்தி, ஆண்டவர் இயேசுவின் மன்னிப்பை இரந்து மன்றாடி உண்மையாக வேண்டுதல் செய்யும்போது ஆண்டவர் இயேசு எமக்கு பாவமன்னிப்பு வழங்குவது மட்டுமல்ல, அவரது திருக்கரத்தை எம்மீது நீட்டி தமது வல்லமையான குணமளிக்கும் ஆசீரை நிறைவாக வழங்கவுள்ளார் என்பதனை விசுவசித்து ஏற்றுக்கொள்வோம்.